**ஊனமுற்றோருக்கான தேசிய மன்றம் - 2013**

ஊனமுற்றோருக்கான தேசிய மன்றத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோருக்கான உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தின் 18(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊனமுற்றோருக்கான தேசிய மன்றத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்று தொடர்பான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பிரதேச செயலகத்தினால் திருப்பி அனுப்பப்பட்ட ரூபா 1,090,000 வீடமைப்பு உதவிக் கொடுப்பனவு திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதியாகக் கருதி கணக்கு வைக்கப்பட்டமையினால் ஆண்டின் வருமானம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சுபிரி வாசனா லொத்தர் மானியத்திற்காக திறைசேரியிலிருந்து கிடைக்கவேண்டிய தொகை ரூபா 11,844,054 ஆக இருந்த போதிலும் அது ரூபா 17,428,500 எனக் காண்பிக்கப்பட்டமையினால் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் வருமானம் என்பன ரூபா 5,584,446 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 135 மற்றும் நிதிப் பிரமாணம் 395(ஏ) | நிதிக்கட்டுப்பாடு தொடர்பான கடமைச் செயற்பாடுகள் பல உத்தியோகத்தர்களுக்கிடையே பிரிந்து செல்லும் வகையில் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் காசேடு பேணுதல், செலவினப் பேரேட்டைப் பராமரித்தல், வங்கிக் கணக்கிணக்கக்கூற்றைத் தயாரித்தல், காசோலை எழுதுதல் மற்றும் பீஜவீ தயாரித்தல் போன்ற 05 செயற்பாடுகளும் ஒரு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ii) நிதிப் பிரமாணம் 540 | நாள்தோறும் கொடுக்கல் வாங்கல்களின் முடிவில் காசேடு சமப்படுத்தப்பட்டு சரி பிழை பார்க்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சமூக சேவைகள் அமைச்சின் 2011 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய வீடமைப்பு உதவி வழங்கல் சுற்றுநிருபம் | |
| (i) 1.1 ஆம் பந்தி | வீடில்லாத ஊனமுற்றோருக்கு சிறியளவிலான வீட்டை அமைத்துக்கொள்வதற்கு உதவி வழங்குதல் வீடமைப்பு உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக வழங்கப்பட்ட ரூபா 250,000 தொகையான வீடமைப்பு உதவிப் பணம் 2014 மார்ச் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் உரிய நோக்கத்தில் ஈடுபடுத்தாது மூதூர் பிரதேச செயலகத்தில் காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது. |
| (ii) 3.4 ஆம் பந்தி | வீடமைப்பு உதவி உரித்தினைப் பெறுவதற்கு விண்ணப்பதாரின் மாதாந்த வருமானம் ரூபா 6,000 இற்கு மேற்பட முடியாதிருந்த போதிலும் ரூபா 11,400 தொடக்கம் ரூபா 41,121 இற்கு இடைப்பட்ட மாதாந்த வருமானத்தைப் பெறுகின்ற பயங்கரவாத நடவடிக்கைகளினால் ஊனமுற்ற 05 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது வீடமைப்பு உதவியாக ரூபா 1,250,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மன்றத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 1,508,798 மிகையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான மிகை ரூபா 3,621,879 ஆகக் காணப்பட்மையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மிகையில் ரூபா 2,113,081 தொகையான வீழ்ச்சியினைக் காட்டியது. நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு சுபிரி வாசனா லொத்தர் மானியம் ரூபா 85,186,955 இனால் குறைவடைந்தமையும் ஊனமுற்றவர்களுக்கான உதவி உபகரணங்களுக்கான கொடுப்பனவு ரூபா 3,813,376 இனால் அதிகரித்தமையும் முக்கிய காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உதவி உபகரணங்களை வழங்குதல் கோரிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கோரப்பட்டிருந்த 199 உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊனமுற்றோருக்கான நுழைவு வசதிகளை வழங்குவதல் தொடர்பாக 2006 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 1467/1 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய 1619/24 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் காணப்படுகின்ற சகல கட்டிடங்கள், பொது இடங்கள் மற்றும் பொதுச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள் என்பன 2014 ஒக்தோபர் 16 ஆந் திகதிக்கு முன் ஊனமுற்றோருக்கான நுழைவு வசதிகளை வழங்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2014 ஏப்ரல் 24 ஆந் திகதி வரையிலும் மாவட்ட மட்டத்தில் தேவையான தகவல்களைத் திரட்டி நடைமுறைப்படுத்துவதற்கு முறையான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்து அதற்கமைய செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) விளையாட்டு உதவி மற்றும் ஊனமுற்றோருக்கான புனர்வாழ்வளித்தல் அமைப்புக்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக ரூபா 300,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதற்காக எவ்வித தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோருக்கான உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஊனமுற்றதற்கான பிரதான காரணம், அவற்றைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்காக வினைத்திறனான படிமுறைகளை விருத்திசெய்தல் மற்றும் ஊனமுற்றோருக்கான புனர்வாழ்வளித்தல் நிலையங்களை ஸ்தாபித்து பேணுதல் போன்ற செயற்பாடுகள் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டன.

(உ) ஊனமுற்ற நபர்களுக்காக ரூபா 3,000 மாதாந்த வாழ்வாதார உதவி செலுத்துவதற்காக மீளாய்வாண்டின் நிதியேற்பாடு மார்ச் மாதமளவில் பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் நலனாளிகளின் பெயர்ப்பட்டியல் தயாரிப்பதிலுள்ள தாமதத்தினால் 2013 இன் முதல் அரை வருடத்திற்காக உரிய மாதாந்த நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நலனாளிகளுக்கு முடியாதிருந்தது.

### 4.2 செயற்திட்ட அமுலாக்கலின் நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திரிசவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2012 நவம்பர் 30 ஆந் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் உலக வங்கிக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் இரண்டாவது பகுதியின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் நாட்டின் வட பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 09 மாவட்டங்களில் குறைந்த வருமானம் பெறும் 3,060 ஊனமுற்ற நபர்களுக்கு ரூபா 3,000 படி வருடத்திற்கு ரூபா 110,160,000 தொகை ஊனமுற்றவர்களின் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட வேண்டும். அந்த உடன்படிக்கையின் 03 அவது பகுதியின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் இச் செயற்பாடுகள் 2012 ஒக்தோபரில் ஆரம்பிக்கப்பட்டு 2015 மார்ச் 30 ஆந் திகதியில் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் 2013 ஏப்ரல் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு அந்த மாதத்திற்காக மாத்திரம் ஊனமுற்ற நபர்களின் 1,792 கணக்குகளுக்கு ரூபா 5,376,000 தொகை செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 2,963 வங்கிக் கணக்குகளுக்கு ரூபா 77,214,000 தொகை மாத்திரம் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ஆரம்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை 97 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின் ஏப்ரல் மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரையான 08 மாத காலப்பகுதிகளுக்குரிய ஊனமுற்ற நபர்களின் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்ட படிக் கொடுப்பனவுகளின் ரூபா 7,317,000 கூட்டுத்தொகையான பணக் கணக்கு இலக்கம் இணங்காமை, நலனாளிகளின் பெயரில் வேறுபாடுகள் மற்றும்

வங்கிக் கிளைக் குறியீடு வேறுபட்டமை போன்ற விடயங்களின் காரணமாக நிராகரிக்கப்பட்டிருந்தன.

**4.3 தாமதமாகிய செயற்திட்டங்கள்**

உலக வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஊனமுற்றவர்களுக்காக தொழிற்பயிற்சி மற்றும் இயலுமையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் 2012 ஒக்தோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2015 மார்ச் மாதத்தில் பூர்த்திசெய்வதற்காக ஐ.அ.டொலர் 470,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2014 கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் அந்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 நிதியத்தின் குறைந்த பயன்பாடு**

வீடமைப்பு உதவி செலுத்துவதற்காக நிதியத்தைப் பயன்படுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2013 திசெம்பர் 31 அந் திகதியில் உள்ளவாறு திறைசேரியின் வீடமைப்பு உதவிக் கணக்கில் ரூபா 5,584,446 தொகை செயற்பாடற்றுக் காணப்பட்டது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும், உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடுசெய்த போது 11 சதவீதம் முதல் 256 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது வினைத்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5.2 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2011 மே 24 ஆந் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழு அறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறைக் கணக்கிலுள்ள மிகையான காசு மீதியை ஏழு நாள் வைப்புக்களில் முதலீடு செய்தல் தொடர்பாக கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது மிகைப் பணத்தை அவ்வாறு முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஒக்தோபர் 12 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழு கூட்டத் தீர்மானத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் வீடமைப்பு உதவிக்காக தனிப்பட்ட வங்கிக் கணக்கை ஆரம்பிக்குமாறு கட்டளையிடப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக 2012 திசெம்பர் 14 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டத்தின் போது அந்தக் கட்டளையை அமுல்படுத்துமாறு உரிய அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு வீடமைப்பு உதவிக்காக தனியான வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரினது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) திரிசவிய நிகழ்ச்சித்திட்டம்
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) கணக்கீடு
(ஈ) உதவிக் கொடுப்பனவு
(உ) செயற்திட்ட அமுலாக்கல்